சுற்று நிருபம்- 51/2000

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு,
வடக்கு கிழக்கு மாகாணம்,
உட்துறைமுக வீதி,
திருகோணமலை.
31.12.2000.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள்,
கொத்தனிகள், சமாசங்கள், வடிசாலைகள் ஆகியவற்றின் தலைவர்கள்
யாவருக்கும்.

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், கொத்தனிகள், சமாசங்கள், வடிசாலைகள் ஆகியவற்றில் கடமை செய்யும் ஊழியர்களின் ஆளணியை அங்கீகரித்தலும், பதவி நிர்ணயம் செய்தலும்.

---

மேற்குறிப்பிட்ட விசேட வகைக் கூட்டுறவுச் சங்க ஊழியர்களின் பதவி நிர்ணயம் தொடர்பாகக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களமும், கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவும் பிரத்தியேக கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இச்சங்கங்கள், கொத்தனிகள், சமாசங்கள், வடிசாலைகள் கூட்டுறவுச் சட்ட ஏற்பாடுகளுக்கமைவாக நிர்வகிக்கப் பட வேண்டிய கடமைப்பாடு உள்ளபோதிலும், பொதுவாக எல்லாச் செயற்பாடுகளிலும் குறிப்பாக ஆளணி நியமனம் ஆகியவற்றில் கூட்டுறவுச் சட்ட ஏற்பாடுகள் கவனிக் கப்படாமல் இருந்துள்ளது. எனவே ஆளணி நியமனங்கள் ஆகியவற்றைக் கூட்டுறவுச் சங்கச் சட்ட ஏற்பாடுகளுக்கமைவாக செயற்படுத்தப்படவேண்டிய நிர்ப்பந்தம் திணைக்களத்திற்கும், ஆணைக்குழுவிற்கும் ஏற்பட்டுள்ளது.

இவற்றிற்கான ஆளணி அவ்வச் சங்கங்களின் தற்போதைய பொருளாதார மற்றும் தொடர்புபட்ட சூழ்நிலைக்கமைவாகத் திணைக்களத் தலைவரினால் மட்டும் அங்கீகரிக்கப்படல் வேண்டும். அவ்வாறு முழுமையாகச் செயற்படாமையால் ஆளணியிலுள்ள பதவிகளுக்கு நியமன அங்கீகாரம் வழங்குவதிலும், அதன் விளைவினால் இவ்வாணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட புதிய சம்பளத் திட்டங்களை அவ்வூழியர்களுக்கு வழங்குவதில் நீண்ட கால தாமதம் ஏற்பட்டுள்ளதனை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

எனவே, தமது சங்கத்திற்குரிய ஆளணி அங்கீகாரத்தைத் தற்போதைய சூழ்நிலைக்கமைவாகப் பெறத் தவறிய சங்கங்கள் யாவும் உடனடியாக அவ்வாறான அங்கீகாரத்தைப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறாகவோ அல்லது ஏற்கனவோ ஆளணி அங்கீகாரத்தைப் பெற்ற சங்கங்கள் தங்களின் ஊழியர்களின் நியமன நிர்ணயத்தினைக் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவிடம் பெறுவதற்கு உரிய ஆவணங்களை சம்பந்தப்பட்ட உதவிக் கூட்டுறவு ஆணையாளர் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

அவ்வாறு சில சங்கங்கள் பதவி நிர்ணய நியமனங்களுக்குத் தேவையான ஆவணங்களை உதவிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரிடம் அனுப்பப்பட்ட போதிலும், அவை பதவிகளுக்குரிய தகமைகள் இல்லை என்பதால் தாமதிக்கப்படுவதாகக் கூறப் படுகின்றது.- இச்சங்கங்களில் 10 வருட காலமாக நியமன நிர்ணயம் செய்யப்படாமல் இருப்பதாகவும், பல வருட காலமாக ஊழியர்கள் தற்காலிக, அமைய ஊழியர்களாக சேவையிலுள்ளார்கள் எனவும் கூறப்படுகின்றது. அவ்வாறு செய்வது கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவிற்கு மாத்திரமின்றி தொழிற் சட்ட விதிகளுக்கும் மாறானவையாகும்.

இச்சங்கங்கள் 1972ம் ஆண்டில் குறிப்பாக சீவல் தொழிலாளரின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்காக ஸ்தாபிக்கப்பட்டமை என்பதை கவனத்திற்கெடுக் கப்படவேண்டும். அக்கால கட்டத்திலேயே இச் சமூகத்தில் போதிய கல்வித் தகமை யுடைய ஊழியர்கள் இன்மையால் 5 வருடங்களுக்குப் பின் திருப்திகரமான சேவையுடை யவர்கள் யாவரும் கொழும்பு கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் அவ்வவ் பதவிகளில் பதவி நிர்ணயம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவ்வாறே விசேட காரணங்களுக்காக தற்பொழுதும் இச்சங்கங்களிலுள்ள 5 வருட திருப்தி கரமான சேவையுடைய ஊழியர்கள் யாவரும் அவ்வவ் பதவிகளில் நிர்ணயம் செய்ய ஆணைக்குழுவினால் பின்வரும் வகையில் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1) 2000ம் ஆண்டில் மேற்குறிப்பிட்டவாறு திருப்திகரமான சேவையிலுள்ளவர்கள் யாவரும் அவ்வவ் பதவிகளில் நியமன நிர்ணயம் செய்வதற்குத் தேவையான ஆவணங் களுடன் உதவிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மூலம் அனுப்பிவைக்கவும்.

2) 2000ம் ஆண்டில் 5 வருடங்களுக்குக் குறைவான சேவையுடையவர்கள் 5 வருட திருப்தி கரமான சேவையைப் பூர்த்தி செய்யும் போது 1ல் கூறியவாறு நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3) கல்வித் தகமையுடையவர்கள் தொடர்பில் முன்னைய சுற்று நிருபங்கள், ஒழுங்கு விதிகள் வலுவிலிருக்கும்.

4) 01.01.2001 தொடக்கம் எக்காரணங்கள் கொண்டும் சங்கங்கள் கல்வித் தகமையற்றவர்களை இவ்வாணைக்குழுவின் முன் அனுமதியின்றி நியமனம் செய்யக் கூடாது. அப்படிச் செய்யும் சங்கங்களின் முகாமைக்கெதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

30.12.2000 ஆந் திகதிய ஆணைக்குழுவின் கட்டளைப்படி.

R. Kun...

றா. கனகரத்தினம்.
செயலாளர்.
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு.
(வ.கி.மா.)

பிரதிகள்:-

1. செயலாளர், மாகாண பொது நிர்வாக உள்ளூராட்சி கூட்டுறவு அமைச்சு. (தகவலுக்கு)
2. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர். (தகவலுக்கு)
3. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள் யாவருக்கும். (தகவலுக்கும் பொருத்தமான நடவடிக்கைக்கும்.)